டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.07.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 030 - Madurai | Online Edition

# போரோபீன் அடிப்படையிலான பசுமை மசகு எரிசக்தியைச் சேமிக்க உதவும்

புது தில்லி, ஜூலை 22

விளக்கெண்ணெயில் உயர் செயல்திறன் கொண்ட மசகு எண்ணெய் சேர்க்கைப் பொருளாக, இரு பரிமாண நானோ பொருளான போரோபீனின் பயன்பாட்டை முதன்முறையாக விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இதன் மூலம் நீடித்த மசகு எண்ணெய் பயன்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்பு முனையை அவர்கள் அடைந்துள்ளனர்.

உலகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் எரிசக்தி இழப்பு மற்றும் உபகரணச் செயலிழப்புக்கு உராய்வும் தேய்மானமும் முக்கியக் காரணங்களாகும். எனவே, இந்த இழப்புகளைத் திறம்படக் குறைக்கக்கூடிய மேம்பட்ட மசகு எண்ணெய்களை உருவாக்குவது ஒரு முக்கிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சவாலாகும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான, குவஹாத்தியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு ஆய்வுக் குழு, விளக்கெண்ணெயுடன் மிகச் சிறிய அளவிலான போரோஃபீனை சேர்ப்பது, அதன் மசகுத்தன்மையை வியத்தகு முறையில் மேம்படுத்துவதாகவும், தூய எண்ணெயுடன் ஒப்பிடும் போது உராய்வை சுமார் 42 சதவீதம் குறைப்பதாகவும் நிரூபித்துள்ளது.



# 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் நேரடி கள ஆய்வு!



திருச்சி, ஜூலை 22

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் 2026-27' ஆம் ஆண்டிற்கான குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டப் பணிகளை 21.07.26 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

## குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மண்ணச்சநல்லூர் வட்டாரத்திற்கு 100 ஏக்கர் சாகுபடி இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை இயந்திர நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு மூலம் 60 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இயந்திர நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4000 வீதம் பின்னேற்பு மானியம் வழங்கப்பட உள்ளது. மேலும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட நெல் ரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10 வீதம் மானியமும், உயிர் உரங்கள் மற்றும் நெல் நுண்ணூட்டக் கலவை ஆகியவை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## வயல்வெளி ஆய்வுகள்

மாவட்ட ஆட்சியர் தனது ஆய்வின் போது, பிச்சாண்டர் கோவில் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி கண்ணன் (த/பெ. ராமர்) என்பவரது 5.5 ஏக்கர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு செய்த வயலை பார்வையிட்டு நேரடி நெல் விதைப்பு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து, திருவாசி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பிரேமா (க/பெ. சேட்டு) என்பவரது 6 ஏக்கர் பரப்பளவிலான வயலில் இயந்திர நடவு செய்த நெல் நடவுப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

### வேளாண் விரிவாக்க மையத்தில் ஆய்வு

வயல்வெளி ஆய்வுகளைத் தொடர்ந்து, மண்ணச்சநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையம் அலுவலகம் மற்றும் கிடங்குகளில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும், விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவைகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் ஆகிய இடுப்பொருட்கள் இருப்பு மற்றும் விநியோகம் குறித்து விரிவாக கேட்டறிந்து அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த நேரடி ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, வேளாண்மைத் துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் – வேளாண்மை) ஜெயராணி, மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி, வேளாண்மை அலுவலர் கலைச் செல்வி, ரோகித், துணை வேளாண்மை அலுவலர் ஜான் ஜெயக்குமார் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் பார்த்திபன், கதிரேசன், ஆனந்து, கிடங்கு கண்காணிப்பாளர் தேன்விமின் மற்றும் விற்பனை உதவியாளர் சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஓய்வு பெற்ற அலுவலர் சங்க பேரவைக் கூட்டம்

திருப்பூர், ஜூலை 22

ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம், உடுமலைப்பேட்டை கிளை 17 வது வட்டக் கிளை பேரவைக் கூட்டம் மற்றும் 13வது திருப்பூர் மாவட்ட பேரவைக் கூட்டம் மாநிலத் தலைவர் சிவ.திருமேனி நாதன், சிறப்புரை ஆற்றினார். மேலும் கோவை மாவட்ட தலைவர் Dr.ராமதாஸ் , SBI life insurance மேலாளர் இளமதி மற்றும் வாசன் கண் மருத்துவ குழு தலைவர் Dr.தர்மலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இரசாயன உரங்களைச் சீராகப் பயன்படுத்துவது குறித்து எடுத்துரைத்த வேளாண்மை உதவி இயக்குநர்



சேலம், ஜுலை 22

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அதிகப் படியான இரசாயன உரப் பயன் பாட்டைத் தவிர்த்து, மண் பரிசோதனை அடிப் படையில் சீரான அளவில் உரங்களைப் பயன்படுத்துவது குறித்து எடப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பூங்கொடி விவசாயி களுக்கு கூறிய செய்தி என்னவெனில்,

● **மண் பரிசோதனை அவசியமானது :** விவசாயிகள் தங்களது நிலத்தின் மண் மாதிரிகளைச் சேகரித்து வேளாண்மைத் துறை மூலம் பரிசோதனை செய்து, மண்ணில் உள்ள சத்துகளின் நிலையை அறிந்த பின்னரே அதற்கேற்றவாறு உரங்களை இட வேண்டும்.

● **அதிகப்படியான பயன்பாட்டால் பாதிப்புகள் :** யூரியா மற்றும் இதர இரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாகப் பயன் படுத்துவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதுடன், சாகுபடி செலவு அதிகரித்து இறுதியில் மகசூலும் குறைய வாய்ப்புள்ளது.

● **பரிந்துரைக்கப்பட்ட அளவு :** அந்தந்தப் பயிர்களின் வயது மற்றும் வளர்ச்சிப் பருவத்திற்கேற்ப வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் அளவில் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துகளைப் பிரித்து வழங்குவது அவசியமாகும்.

● **இயற்கை உரங்களுடன் ஒருங்கிணைப்பு :** இரசாயன உரங்களுடன் தொழுவுரம், மண்புழு உரம் மற்றும் உயிர் உரங்களைச் சேர்த்துப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் ஈரப்பதமும் வளமும் நீண்ட காலம் பாதுகாக்கப்படும்.

எடப்பாடி வட்டார விவசாயிகள் தங்களது சந்தேகங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளையும், மண் பரிசோதனை வசதிகளையும் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# கந்தர்வகோட்டை வட்டாரத்தில் மானிய விலையில் நிலக்கடலை விதைகள் விநியோகம்

புதுக்கோட்டை, ஜூலை 22

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பு காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் மானிய விலையில் நிலக்கடலை விதைகளை பெற்று பயனடைய வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) இரா.விக்னேஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பாண்டு தேசிய உணவு எண்ணெய்வித்து இயக்கத்தின் கீழ் மதிப்பு கூட்டுதல் சங்கிலி தொகுப்பு திட்டத்தின்கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.125 /- மானிய விலையில் ஒரு ஹெக்டேருக்கு 150 கிலோ வீதம் விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் சாகுபடி செய்து விளைவிக்கப்படும் விளைபொருட்களை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு விவசாயிகள் நேரடியாக வழங்கிடும் பொருட்டு இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் இத்திட்டத்தின்கீழ் விநியோகம் செய்திட விஆர்ஐ 10, கிர்னார் 4 மற்றும் கிர்னார் 5 இரக நிலக்கடலை விதைகள் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே நடப்பு ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் மானிய விலையில் நிலக்கடலை விதைகளை பெற்று பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# நஞ்சில்லா உணவிற்கு வீட்டு காய்கறி தோட்டம்



திருச்சி, ஜூலை 22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி துவக்கி வைத்து வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் குறித்து விளக்கினார்.

மேலும் எல்நினோ தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளை கட்டுப்படுத்த விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். இணைப் பேராசிரியர் முனைவர் ராதிகா, நஞ்சில்லா உணவிற்கு காய்கறி பயிர்களில் இயற்கை முறையில் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை துறை இணைப்பேராசிரியர் முனைவர் தனலட்சுமி, நமது வீட்டின் அன்றாடதேவைகளுக்கு ஏற்ப காய்கறி தோட்டம் அமைத்து நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களுடன் பல தரப்பட்ட மருத்துவ குணங்களைக் கொண்ட காய்கறிகளை நாமே உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளித்தார்.

மேலும் மாடித்தோட்டம் அமைப்பு செயல்முறை, வளர்ப்பு ஊடகங்கள், குழித்தட்டு நாற்றங்கால், பழச்செடிகள் உற்பத்தி போன்ற தலைப்புகளின் கீழ் செயல்விளக்கப் பயிற்சி அளித்தார். இறுதியாக வீட்டுகாய் கறிதோட்டம் அமைப்பது குறித்த மடிப்பிதழ் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# நிலக்கடலையில் இரும்புச்சத்து குறைபாடு - காரணங்களும் தீர்வுகளும்

நிலக்கடலை தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராகும். அதிக மகசூலைப் பெற நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பேரூட்டச் சத்துகளுடன் நுண்ணூட்டச் சத்துகளும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன.



அவற்றில் இரும்பு தாவர வளர்ச்சிக்கு இன்றியமையாத நுண்ணூட்டமாகும். மண்ணில் இரும்புச்சத்து போதுமான அளவில் இருந்தாலும், தாவரத்தால் அதை உறிஞ்ச முடியாத சூழ்நிலையில் இரும்புச்சத்து குறைபாடு (Iron Chlorosis) ஏற்படுகிறது. இது இலைகள்மஞ்சளாக மாறுவதுடன், ஒளிச் சேர்க்கை குறைந்து மகசூலிலும் கணிசமான இழப்பை ஏற்படுத்துகிறது.

**இரும்பின் பங்கு என்ன?**

இரும்பு நேரடியாக பச்சையத்தின் ஒரு பகுதியாக இல்லா விட்டாலும், பச்சையம் உருவாகவும், ஒளிச்சேர்க்கை நடைபெறவும், சுவாசம், நொதி செயல்பாடுகள் மற்றும் புரத உற்பத்திக்கும் இன்றியமையாததாகும். இரும்புச்சத்து போது மான அளவில் இருந்தால் தாவர வளர்ச்சி சீராக நடைபெறும்.

**ஏன் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படுகிறது?**

பல விவசாயிகள் ‘மண்ணில் இரும்பு இருக்கும் போது ஏன் குறைபாடு வருகிறது?‘ என்று கேட்பார்கள். இதற்கு முக்கிய காரணம் மண்ணில் இரும்பு இல்லாதது அல்ல; அது தாவரத்திற்கு கிடைக்காத வடிவமாக மாறுவது தான்.

**முக்கிய காரணங்கள்**

**1. சுண்ணாம்பு அதிகமுள்ள மண்**

சுண்ணாம்புச்சத்து அதிகமுள்ள கார மண்ணில் இரும்பு கரையாமல் தாவரத்திற்கு கிடைக்காத வடிவமாக மாறி விடுகிறது.

**2. அதிக மண் காரத்தன்மை (High pH)**

மண்ணின் pH 7.5–க்கு மேல் இருந்தால் இரும்பு கிடைக்கும் திறன் மிகவும் குறைகிறது.

**3. அதிக பாஸ்பரஸ் உரமிடுதல்**

ம்புஊண அல்லது பாஸ்பரஸ் உரங்களை அளவுக்கு மீறி பயன்படுத்தும் போது இரும்பின் உறிஞ்சுதல் பாதிக்கப்படுகிறது.

**4. அதிக ஈரப்பதம் அல்லது நீர்தேக்கம்**

நீர்தேங்கும் வயல்களில் வேர் செயல்பாடு குறைவதால் இரும்பு உறிஞ்சுதல் பாதிக்கப்படுகிறது.

### 5. குளிர்ச்சியான காலநிலை

சில நேரங்களில் குறைந்த வெப்ப நிலையிலும் இக்குறைபாடு அதிகமாகக் காணப்படுகிறது.

### 6. வேர் வளர்ச்சி பாதிப்பு

நூற்புழு தாக்குதல், வேர் அழுகல் நோய் அல்லது வேர் சேதம் ஏற்பட்டாலும் இரும்பு உறிஞ்சுதல் குறைகிறது.

## அறிகுறிகள்

இரும்புச்சத்து குறைபாட்டை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

### முக்கிய அறிகுறிகள்

- முதலில் இளம் இலைகளில் அறிகுறி தோன்றும்.
- இலை நரம்புகள் மட்டும் பச்சையாக இருக்கும்.
- நரம்புகளுக்கு இடையில் மஞ்சள்நிறம் காணப்படும்.
- கடுமையான நிலையில் முழு இலை வெளிர்மஞ்சள் அல்லது வெண்மை நிறமாக மாறும்.
- புதிய இலைகள் சிறியதாக உருவாகும்.
- செடி வளர்ச்சி குன்றும்.
- பூக்கும் எண்ணிக்கை குறையும்.
- நெற்றுகள் (Pods) குறைவாக உருவாகும்.
- இறுதியில் மகசூல் 15-40% வரை குறையக் கூடும்.

## தீர்வு மற்றும் மேலாண்மை

### 1. இலைவழி தெளிப்பு

இது மிகவும் விரைவான தீர்வாகும். 0.5% பெரஸ்சல்பேட் (Ferrous Sulphate) + 0.25% சிட்ரிக் அமிலம் அல்லது 1% பெரஸ்சல்பேட் + 0.5% சுண்ணாம்பு கரைசல் (தனித்தனியாகக் கரைத்து பின்னர் கலந்து) 20-25 நாட்களில் முதல் தெளிப்பும், 10-15 நாட்கள் கழித்து இரண்டாவது தெளிப்பும் மேற் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

### 2. மண்ணில்இடுதல்

### மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில்

- பெரஸ் சல்பேட்டை தொழுஉரத்துடன் கலந்து இடலாம்.
- உயிர் உரங்களுடன் சேர்த்து பயன்படுத்தினால் பயன்பாடு அதிகரிக்கும்.

### 3. கரிமப்பொருள் சேர்த்தல்

நன்கு மக்கிய தொழுஉரம், கம்போஸ்ட், மண்புழு உரம் போன்றவற்றை தொடர்ந்து பயன்படுத்துவதால்

- மண் அமைப்பு மேம்படும்.
- இரும்பு கிடைக்கும் திறன் அதிகரிக்கும்.
- நுண்ணுயிர் செயல்பாடு உயரும்.

### 4. மண் pH–ஐ கட்டுப்படுத்துதல்

அதிக கார மண்ணில்

- கரிமப் பொருள் சேர்க்க வேண்டும்.
- தேவையற்ற சுண்ணாம்பு பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும்.
- சமச்சீர் உரமிடல் கடைபிடிக்க வேண்டும்.

### 5. நீர் மேலாண்மை

- வயலில் நீர் தேங்க விடக்கூடாது.
- தேவைக்கேற்ப மட்டுமே பாசனம் செய்ய வேண்டும்.
- நல்ல வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.

### 6. சமச்சீர் உரமிடல்

அதிக பாஸ்பரஸ் உரங்களைத் தவிர்த்து மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும்.

### விவசாயிகளுக்கான முக்கிய ஆலோசனை

பல நேரங்களில் நிலக்கடலையில் காணப்படும் மஞ்சள் இலைகளை நைட்ரஜன் குறைபாடாகக் கருதி யூரியாவை மீண்டும் மீண்டும் இடுகின்றனர். ஆனால், இளம் இலைகளில் நரம்புகள் பச்சையாக இருந்து, நரம்புகளுக்கு இடையே மட்டும் மஞ்சள் நிறம் தோன்றினால் அது பெரும்பாலும் இரும்புச்சத்து குறைபாட்டின் அறிகுறியாகும். இந்நிலையில் யூரியா இடுவதற்குப் பதிலாக சரியான இரும்புச்சத்து மேலாண்மையை மேற்கொண்டால் மட்டுமே பயிர் மீண்டு நல்ல மகசூல் கிடைக்கும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ் மற்றும் சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை) கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி.***



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# காணாமல் போகும் மண்வளம்?



உலக அளவில் விவசாய நிலங்களின் மேல் மண் சுமார் 24 லட்சம் டன் அளவுக்கு காணாமல் மறைந்து வருவதாக ஒரு ஆய்வில் தெரிகிறது. அது எப்படி? என்பதை இந்த பதிவில் பார்ப்போம்.

**சத்துமிக்க மேல் மண்? (TOP SOIL)**

நிலத்தின் மேல் பகுதி மண்ணில் தான் அதிகமான சத்துகள் உள்ளன. பயிர் வளர்ச்சிக்கு உதவும் பாக்டீரியா, பூஞ்சை போன்ற நுண்ணுயிர்கள், மண்புழுக்கள், கரிம பொருட்கள், தாவரங்களுக்கு தேவையான சத்துகள் நீரை சேமிக்கும் திறன் இவை அனைத்து மேல் மண்ணுக்கு தான் உண்டு.

**எப்படி மேல் மண் காணாமல் போகிறது?**

சத்துமிக்க மேல் மண் காற்று, மழை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மண் அரிமானம் ஏற்பட்டு வளம் இழந்து வருகிறது. அதாவது மேல் மண்ணை ஆழமாக உழும் போது, மண்துகள்கள் சிதைந்து நுண்ணுயிர்களின் வாழ்விடமும் அழிந்து போகும். அதுமட்டுமல்ல மண்ணில் இருக்கும் கரிமக் கார்பன் காற்றில் வெளியேறி மண் விரைவில் காய்கிறது. மழை, வெள்ளம் வந்தால் வளமான மேல் மண்ணை எளிதாக அரித்து செல்லப்படுகிறது.

இதுபோலவே ஒரே நிலத்தில் ஒரே பயிரை சாகுபடி அடுத்தடுத்து செய்வதால் அதற்கு தேவையான சத்துகளை தொடர்ந்து மண்ணில் கிரகிக்கப்படுவதால் மண்ணில் தழை, மணி, சாம்பல் சத்துகள் இழந்து வளமற்றதாக மாறி விடுகிறது.

மண்ணில் இயற்கை உரங்களை போடாமல் அதிகமாக மகசூல் பெற கண்ட கண்ட இரசாயன உரங்களை போடுவதால், மண்வளம் இறுகி மண்வளம் குன்றிபோகும். இதனால் மண் இறுகி நீர் ஊடுருவல் குறைந்து மகசூல் பாதிக்கும்.

**மேல் மண்ணை எவ்வாறு காக்க வேண்டும்?**

1) ஆழமாக உழவு செய்யாமல் பயிர் செய்வது.

2) ஆட்டுகிடை, மாட்டுகிடை போடுதல்

3) சாகுபடி செய்யாத காலங்களில் பசுந்தாள் பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழவு போடுதல் (பல பயிர் சாகுபடி)

4) மாற்று பயிர் சாகுபடி (CROP ROTATION)

5) இயற்கை உரங்கள் (ஜீவாமிர்த கரைசல், மீன் அமிலம்) போன்றவற்றை இடுதல்

6) உயிர் உரங்களை அதிகமாக பயன்படுத்துதல் (BIO FERTILIZERS)

மேலே கண்ட விபரங்களை பின்பற்றினால் மேல் மண்ணை தக்க வைக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# புதுக்கோட்டை வட்டாரத்தில் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, ஜுலை 22

புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் நடப்பு குறுவை பருவ நெல் மற்றும் காரீப் பருவ நிலக்கடலை பயிர்களுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து பயன் பெருமாறு வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, நடப்பு ஆண்டு 'எல்-நினோ' தாக்கத்தால் பருவ மழை இயல்பை விட குறைவாக பெய்வதற்கு வாய்ப்பு இருப்பதால், நடப்பு குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மற்றும் காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களை பிரத மந்திரியன் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து பயன் பெறலாம்.

புதுக்கோட்டை வட்டாரத்தில் நடப்பு ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்திட எஸ்பிஐ ஜெனரல் இன்சுரன்ஸ் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ விருப்பத்தின் பெயரில் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

கடன் பெறாத விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ அல்லது பொது சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது தங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

புதுக்கோட்டை வட்டாரத்தில் குறுவை நெற்பயிருக்கு காப்பீடு செய்வதற்கு செம்பாட்டூர், ஏகவயல், புத்தாம்பூர், குளவாய்ப்பட்டி, மூக்கம்பட்டி, வடவாளம், மணவிடுதி, பெருங்கொண்டான்விடுதி, வாராப்பூர் மற்றும் பெருங்கூர் வருவாய் கிராமங்களும் நிலக்கடலை பயிருக்கு வாராப்பூர் பிர்காவிற்கு உட்பட்ட அனைத்து வருவாய் கிராமங்களும் பயிர் காப்பீடு செய்வதற்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

குறுவை நெற்பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.745 மற்றும் நிலக்கடலை பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.596 காப்பீட்டு பரீமி-யத்தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய நடப்பு ஜூலை மாதம் 31 ஆம் தேதி இறுதி நாளாகும்.

இத்திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு 1436 பசலிக்கான அடங்கல், வங்கி புத்தகத்தின் முன் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் பரீமிய கட்டணத்தை செலுத்தி அதற்கான ரசீதை பெற்று கொள்ளலாம்.

பிரதம மந்திரியன் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து கூடுதல் விபபரங்களுக்கு, தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் அல்லது தோட்டக்கலை அலுவலர் அல்லது தங்கள் வட்டாரத்திற்கு உட்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு இறுதி நாள் வரை காத்திருக்காமல் விரைந்து பயிர் காப்பீடு செய்து பயன் பெற விவசாயிகளை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# கேவிகேயின் மதிப்புக்கூட்டல் பயிற்சியில் விவசாயிகள், மகளிர் மற்றும் இளைஞர்கள் பங்கேற்பு

செங்கல்பட்டு, ஜூலை 22

செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் அமைந்துள்ள ICAR – வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK), தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) சார்பில், ‘முலாம்பழம் மற்றும் தர்பூசணி சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல்‘ என்ற தலைப்பில் ஒரு நாள் நிலையப் பயிற்சி வெற்றிகரமாக நடைபெற்றது.






இப்பயிற்சியில் விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊரக இளைஞர் தொழில் முனைவோர் என மொத்தம் 40-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் இரா.திருமாவளவன் தொடங்கி வைத்து, முலாம்பழம் மற்றும் தர்பூசணியின் அறிவியல் சாகுபடி தொழில் நுட்பங்கள், அதிக மகசூல் பெறுவதற்கான பயிர் மேலாண்மை, நீர் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் ஆகியவை குறித்து விளக்கினார்.

தொடர்ந்து, முனைவர் கோ.பாண்டித்துரை, தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல்), ICAR-வேளாண்மை அறிவியல் நிலையம், முலாம்பழம்மற்றும் தர்பூசணியிலிருந்து ஜூஸ், உடனடி தயார்நிலை (RTS) பானம், ஸ்குவாஷ், ஜாம், ஜெல்லி, சிரப், பழத்தாள் (Fruit Bar), தர்பூசணி தோல் தொக்கு, டூட்டிஃப்ரூட்டி உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை செயல்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மேலும், உணவுப் பதப்படுத்தலில் சுகாதார நடைமுறைகள், FSSAI தர நிலைகள், தரமான பொதியிடல், வர்த்தகப் பெயரிடல் (Branding), லேபிளிங், சந்தைப்படுத்தல் மற்றும் குறைந்த முதலீட்டில் உணவுப் பதப்படுத்தும் தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் விரிவாக விளக்கினார்.

பயிற்சியின் போது மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்புக் கான நேரடி செயல்விளக்கம் (Demonstration) நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு தயாரிப்பு முறைகள், தரக்கட்டுப்பாடு மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் தங்களது சந்தேகங்களுக்கு விஞ்ஞானிகளிடம் விளக்கங்களைப் பெற்று பயனடைந்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டுவதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதுடன், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நிலையான தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்க முடியும் என வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்தனர். மேலும், இதுபோன்ற தொழில்நுட்பப் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# காய்கறி பயிர்கள் ஒருங்கிணைந்த மேலாண்மை பண்ணை பள்ளி பயிற்சி



சேலம், ஜுலை 22

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வேப்பநத்தம் கிராமத்தில் காய்கறி பயிர்களுக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளியின் மூன்றாவது பயிற்சி வகுப்பு சிறப்பாக நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கினார். பயிற்சியில், இயற்கை இடுபொருள்களான பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம் மற்றும் ஐந்திலைக் கரைசல் தயாரிக்கும் முறைகள் குறித்து பயிற்சியாளர் பிரவீன் விரிவாக விளக்கமளித்தார். இப்பயிற்சியில், உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், தொடர்ந்து, ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை குறித்தும், அதனைப் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி விவசாயிகளுக்கு நேரில் செயல்விளக்கம் செய்து காண்பித்தார். மேலும், பயிர்களுக்கான சமச்சீர் உர மேலாண்மை, நீரில் கரையும் உரங்களைப் பயன்படுத்தும் முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, பூச்சித் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து கட்டுப்படுத்தும் நுட்பங்கள் குறித்து பயிற்சியாளர் வரதராஜன் செயல்விளக்கம் உரையாற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி வறட்சி மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளின் ஒன்றான 'பயிர்கள் நீரின்றி வாடும்போது இந்த PPFM பாக்டீரியாவைத் தெளிப்பதன் மூலம், அவை வறட்சியைத் தாங்கும் சக்தியைப் பெறுகின்றன. இது செடிகளின் இலைத்துளைகளைக் கட்டுப்படுத்தி, நீராவிப் போக்கைக் குறைப்பதோடு, பயிர் வாடுவதைத் தடுக்கிறது.

**பயன்படுத்தும் முறை** : ஒரு ஏக்கருக்கு 200 மில்லி பாக்டீரியா கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிரின் வகையைப் பொறுத்து விதைத்த 30, 45, 60 மற்றும் 90-வது நாட்களில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் வறட்சியைத் தாங்குவதுடன், பயிர்களில் கூடுதல் மகசூலும் கிடைக்குமென விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தினர். பயிற்சி வகுப்பில் 25-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பயறு ஒன்டர் : அதிக மகசூலின் ரகசியம்

விருதுநகர், ஜூலை 22

விருதுநகர் மாவட்டத்தில் சராசரியாக 1800 எக்டர் பரப்பளவில் பாசிப்பயறு சாகுபடி செய்யப்படுகிறது. பாசிப்பயறு சாகுபடி விவசாய பெருமக்கள் பாசிப்பயறு வம்பன் 7 சான்று விதைகளை தகுந்த தொழில்நுட்பங்களை கடைபிடித்து சாகுபடி செய்தால் அதிக மகசூல் கிடைக்கும் என அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.ராமசுப்ரமணியன் மற்றும் பயிர் இனபெருக்கம் மற்றும் மரபியல் துறை, இணைப் பேராசிரியர் முனைவர் என்.ஆனந்தி கூறியதாவது,

2024ம் ஆண்டுவெளியிடப்பட்ட பாசிப்பயறு வம்பன் 7 என்ற இரகம் 65 - 70 நாட்கள் வயதுடையது. இந்த இரகம் எல்லாப் பருவத்திற்கும் ஏற்றது. இலைச்சுருட்டு நோய் மற்றும் மஞ்சள் தேமல் நோய்களுக்கு அதிக எதிர்ப்புத்திறன் கொண்ட இரகம். சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 900 கிலோ மகசூல் தரவல்லது. ஒருஏக்கர் சாகுபடி செய்ய 8 கிலோ விதைகள் போதுமானது. விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளுடன் 80 மில்லி த.வே.ப.க விதை அமிர்தத்துடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்வதால் விதைகள் விரைவாக முளைக்கும், அதிகமான வேர் வளர்ச்சி மற்றும் வேர் முடிச்சுகள் காணப்படும், செடிகள் துரிதமாக வளரும், மேலும் வறட்சியை தாங்கி வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கும். நிலத்தின் ஈரப்பதத்தை பொறுத்து 7-10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மேலும் பாசிப்பயறு மகசூலை அதிகரிக்க ஒரு ஏக்கருக்கு 2 கிலோ த.வே.ப.க பயறு ஒன்டர் என்ற நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் நிறைந்த பூஸ்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தேவையான அளவு ஒட்டும் பசையுடன் சேர்த்து பூக்கும் பருவத்தில் தெளித்தால் பூக்கள் உதிர்வது குறையும், பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும், வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

மேற்கூறிய தொழில்நுட்பங்களை பின்பற்றி பாசிப் பயறை சாகுபடி செய்தால் நல்ல மகசூலும், வருமானமும் கிடைக்கும் என தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பெருந்துறை வட்டாரத்தில் நிலக்கடலை குறித்த பண்ணை பள்ளி விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஜூலை 22

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2026-27 ஆம் ஆண்டுக்கான நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி வகுப்பு நிச்சாம்பாளையம் வருவாய் கிராமத்தில் 22.07.26 அன்று பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ச.கலைச்செல்வி, தலைமை தாங்கி துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

வேளாண் அறிவியல் நிலையத்தை சார்ந்த பிரேமலதா, பேசுகையில் மண்பரிசோதனை மூலம் உர மேலாண்மை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண்பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிட வேண்டும் என்பதை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

மேலும் குமரகுரு உதவிபேராசிரியர் முனைவர் செ.செல்வகுமார் கலந்து கொண்டு பேசுகையில், நிலக்கடலை விதையை விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விதைகள் மூலம் பரவும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மண் மற்றும் நீர் மாதிரி சேகரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கமும் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்;டங்கள் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் செய்திருந்தனர்.

# உழவர் திரல் பரவலாக்கம்




சேலம், ஜூலை 22

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் அட்மா திட்டத்தின் கீழ் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற கிசான் கோஷ்தீஸ் எனப்படும் உழவர் திரல் பரவலாக்கம் தளவாய்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் வே.மௌலி தரன், மண் பரிசோதனை, மண்வள அட்டைகள் மற்றும் வேளாண்மை துறை திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்தோஷ், வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் பற்றி பேசினார். மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ப.வீரமணி, ஆமணக்கு, மரவள்ளி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். உதவி பொறியாளர் ர.ரமேஷ் மற்றும் கால்நடை மருத்துவர் ம.ரம்யா, தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். நுண்ணுயிர் பாசனம் திட்டம் பற்றி கோதாரி நிறுவன விற்பனையாளர் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

மேலும் வேளாண் இடுபொருட்களான விதைகள், நுண்ணூட்டம், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ மற்றும் நெல் ரகங்கள், உயிர் உரங்கள் ஆகியவை விவசாயிகளின் பார்வைக்கு கருத்து காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மு.ராஜ்குமார் மற்றும் நெ.பிரியங்கா, பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். பயிற்சியின் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

# மண் வளத்தினை மேம்படுத்திட தக்கைப்பூண்டு

மதுரை, ஜூலை 22

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் செயல் விளக்கத்திடல் என்ற இனத்தில் மண் வளத்தினை மேம்படுத்திட தக்கைப்பூண்டு விதைகள் வழங்கப்பட்டது.

கிராமத்தில் நெல் சாகுபடிக்கு முன்னர் மண் வளத்தினை மேம் படுத்திட கருப்பட்டி கிராமத்தை சேர்ந்த தமோதரன் விவசாயிக்கு அவர்களின் வயலில் தக்கைப்பூண்டு செயல் விளக்கம் அமைத்திட விதைகள் முழு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டது. தக்கைப்பூண்டு விதைப்பதன் மூலம் மண்ணில் நைட்ரஜனை நிலைநிறுத்துதல், உவர் மற்றும் மணல் நிலங்களை சீர்படுத்துகிறது மற்றும் மண்ணில் நீரை தேக்கி வைக்கும் திறன் அதிகப்படுத்தவும் ஈரப்பதத்தை மேம்படுத்தி மண் அரிப்பை தடுக்கின்றது தக்கைப் பூண்டு வயல்களில் அடர்த்தியாக வளர்வதால் பிற களைகள் முளைப்பதை தடுக்கின்றது. தற்போது தக்கைப்பூண்டு விதைத்த வயலினை உழவு செய்து மாற்று பயிராக உளுந்து சாகுபடி செய்துள்ளார். இச்செயல் விளக்கத்திடலினை வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினார். உடன் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணாதேவி உடனிருந்தனர்.

## பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிர்களில் மகசூல் அதிகரிக்க உயர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி



விருதுநகர், ஜுலை 22

விருதுநகர் மாவட்டம், கோவிலான்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கான நிலைய பயிற்சி ‘பருத்தி மற்றும் மக்காச் சோளம் சாகுபடியில் உயர் பயிர் தொழில் நுட்பங்கள்‘ என்ற தலைப்பில் வேளாண் அறிவியல் நிலையம் அருப்புக்கோட்டை மற்றும் வேளாண்மை துறை இணைந்து 22.07.26 அன்று நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் உயர் விளைச்சல் ரகங்கள், விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, களை மேலாண்மை குறித்த தொழில்நுட்ப உரைகள் வழங்கபட்டன.

பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிர்களில் மகசூல் அதிகரிக்க ‘பருத்தி பிளஸ் மற்றும் மக்காச்சோளம் மாக்ஸிம் ‘இலைவழி தெளிப்பு குறித்தும் உதவி பேராசிரியர் முனைவர் த.சம்பத்குமார் எடுத்துரைத்தார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் முனைவர் மு. சுப்ரமணியன், பயிற்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றி னார். நரிக்குடி வட்டார சுபாஷ் சந்திரபோஸ் அட்மா அலுவலரும் இப்பயிற்சியில் கலந்து கொண்டார். இப்பயிற்சியில் 40 விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# கார்பன் குறைப்பு நோக்கில்

# பசுமை வேளாண் பொறியியல்

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களில் காலநிலை மாற்றம் முதன்மையானதாகும். வளிமண்டலத்தில் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்கள் அதிகரித்து வருவதால் பூமியின் வெப்பநிலை ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறது. இதன் விளைவாக பருவமழை மாற்றம், வறட்சி, வெள்ளப்பெருக்கு, வெப்ப



அலை, மண் வளக் குறைவு மற்றும் வேளாண் உற்பத்தி பாதிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இந்தியாவில் மக்கள் தொகையின் பெரும்பாலானோர் வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். எனவே, வேளாண்மைத் துறையை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மாற்றுவது காலத்தின் கட்டாயமாகியுள்ளது. இதற்கான சிறந்த தீர்வாக பசுமை வேளாண் பொறியியல் கருதப்படுகிறது. குறைந்த கார்பன் வெளியீடு, குறைந்த இயற்கை வள நுகர்வு, அதிக உற்பத்தி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பங் களே பசுமை வேளாண் பொறியியலின் அடிப்படையாகும்.

**கார்பன் வெளியீடு என்றால் என்ன?**

மனிதர்களின் பல்வேறு செயல்பாடுகளால் வளிமண்டலத்திற்கு வெளியேறும் கரியமில வாயு மற்றும் பிற பசுமை இல்ல வாயுக் களின் அளவையே கார்பன் வெளியீடு என்று அழைக்கப்படுகிறது.

**வேளாண்மையில் கார்பன் வெளியீடு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் :**

- டீசல் மூலம் இயங்கும் டிராக்டர்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள்.
- அதிக அளவில் இரசாயன உரங்களின் பயன்பாடு.
- பயிர் எச்சங்களை வயலில் எரித்தல்.
- அதிக மின்சார நுகர்வு கொண்ட நீர்ப்பாசன முறைகள்.
- இயற்கை வளங்களை அளவுக்கு மீறி பயன்படுத்துதல்.
- மண் கரிமப்பொருள் குறைதல். இவை அனைத்தும் வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களை அதிகரித்து உலக வெப்பமயமாதலுக்கு காரணமாகின்றன.

**பசுமை வேளாண் பொறியியல் என்றால் என்ன?**

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாமல், இயற்கை வளங்களை பாது காத்து, குறைந்த கார்பன் வெளியீட்டுடன் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவும் தொழில்நுட்பங்களின் தொகுப்பே பசுமை வேளாண் பொறியியல் ஆகும்.

**இதன் முக்கிய நோக்கங்கள் :**

- கார்பன் வெளியீட்டைக் குறைத்தல்.
- நீர் மற்றும் மண் வளங்களை பாதுகாத்தல்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகரித்தல்.
- விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்தல்.
- நிலையான உணவு உற்பத்தியை உறுதி செய்தல்.
- எதிர்கால தலைமுறைக்கான இயற்கை வளங்களை பாதுகாத்தல்.

## கார்பன் குறைப்பில் வேளாண் பொறியியலின் பங்கு

### 1. சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் நீர்ப்பாசனம்

டீசல் மோட்டார்களுக்கு மாற்றாக சூரிய ஆற்றல் பம்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால்,

- டீசல் செலவு குறைகிறது.
- கரியமில வாயு வெளியீடு குறைகிறது.
- மின்சார சேமிப்பு ஏற்படுகிறது.
- விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கிறது.

தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. சூரிய ஆற்றல் பம்புகளை ஊக்குவிக்கும் பல்வேறு அரசு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

### 2. துல்லிய வேளாண்மை

துல்லிய வேளாண்மை என்பது தேவையான இடத்தில் தேவை யான அளவு உரம், தண்ணீர் மற்றும் பூச்சிக் கொல்லிகளை மட்டுமே பயன்படுத்தும் நவீன தொழில்நுட்பமாகும்.



**இதில் பயன்படுத்தப்படும் கருவிகள் :**

- டிரோன், செயற்கைக்கோள் படங்கள், மண் ஈரப்பத உணரிகள், உலக இருப்பிடக் கண்டறியும் அமைப்பு , இணையவழி உணரிகள்

**இதன் நன்மைகள் :**

- 30 முதல் 40 சதவீதம் வரை உர சேமிப்பு.
- 40 முதல் 60 சதவீதம் வரை நீர் சேமிப்பு.
- எரிபொருள் பயன்பாடு குறைவு.
- அதிக மகசூல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

### 3. டிரோன் தொழில்நுட்பம்

இன்றைய வேளாண்மையில் டிரோன்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. டிரோன் மூலம்,

- உர தெளித்தல். பூச்சிக்கொல்லி தெளித்தல். விதை பரவல். பயிர் ஆரோக்கிய கண்காணிப்பு. நோய் கண்டறிதல். போன்ற பணிகள் மிகக் குறைந்த நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் மனித உழைப்பு குறைவதுடன் எரிபொருள் பயன்பாடும் குறைகிறது.

### 4. சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்

நீர் பற்றாக்குறை அதிகரித்து வரும் நிலையில், சொட்டு மற்றும் தெளிப்பு பாசன முறைகள் மிக முக்கியமானதாக மாறியுள்ளன.

### 5. வேளாண் கழிவுகளை செல்வமாக மாற்றுதல்

நெல் தழை, கரும்புத் தோகை, தென்னை நார், மக்காச்சோளத் தட்டு போன்ற வேளாண் கழிவுகளை எரிப்பதற்குப் பதிலாக,

- இயற்கை உரம்
- மண்புழு உரம்
- உயிரி எரிவாயு
- உயிர்க்கரி
- உயிரி ஆற்றல் ஆக மாற்றலாம். இதனால்,
- காற்று மாசுபாடு குறைகிறது.
- மண் வளம் அதிகரிக்கிறது.
- கார்பன் மண்ணிலேயே சேமிக்கப்படுகிறது.
- விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

### தமிழ்நாட்டின் தற்போதைய நிலை

தமிழ்நாடு காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பல்வேறு பசுமைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- 2026 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு வேளாண் வனவியல் கொள்கை மூலம் விவசாய நிலங்களில் தேக்கு, சந்தனம், செம்மரம், மகோகனி போன்ற மரங்களை வளர்க்க அரசு ஊக்குவிக்கிறது. இதன் நோக்கம்



மரக்கவசத்தை அதிகரிப்பதோடு, விவசாய வருமானத்தையும் உயர்த்துவதாகும்.

● பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம் மாநிலத்தின் மரக்கவசத்தை சுமார் 23.6% இலிருந்து 33% ஆக உயர்த்தும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கார்பன் உறிஞ்சுதலை அதிகரிக்கும் முக்கிய நடவடிக்கையாகும்.

● மாநில வேளாண் பட்ஜெட்டுகளில் இயற்கை வேளாண்மை, நுண்ணிய பாசனம், துல்லிய வேளாண்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டிற்கு தொடர்ந்து நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

**முடிவுரை :**

சூரிய ஆற்றல், துல்லிய வேளாண்மை, டிரோன் தொழில்நுட்பம், சொட்டு நீர்ப்பாசனம், வேளாண் வனவியல் மற்றும் வேளாண் கழிவுகளின் மதிப்பூட்டல் போன்ற தொழில்நுட்பங்களை பரவலாகப் பயன்படுத்துவதன் மூலம் கார்பன் வெளியீட்டை கணிசமாகக் குறைக்க முடியும். இதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் வருமானம், மண் வளம், நீர் வளம் மற்றும் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும்.

‘கார்பனை குறைப்போம் — இயற்கையை காப்போம் — நிலையான வேளாண்மையை உருவாக்குவோம்.‘



கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumar-subramani2002@gmail.com***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**